1978 மார்ச் 3]

திரு. ரா. உமாநாத் : எப்போதோ ஒரு தடவைதான் வெள்ளம் வரும் என்று சொன்னுர்கள். அதனல் 'மேஜர் போர்ஷன்' நாற்றம் அடிக்கும் காலமாகத்தான் இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதை நகராட்சி மன்றம் கவனிக்கும்.

தேனி ஒன்றியத்திற்கு பாசன வசதிகள்.

*362 வினு —திரு. வெ. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா: தேனி ஒன்றியத்திலுள்ள வறட்சிப் பகுதிகளாகிய கொடுவிலான்பட்டி, தாடிச்சேரி தப்புக்குண்டு, பூமலேக்குண்டு, ஜங்கல்பட்டி ரெவின்யூ கிராமங்களுக்கான நீர்பாசனத் திட்டங்களே ஏற்படுத்துவதற்கு அரசு செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாளிட்ட அரசு பொதுப்பணித்துறை ஆணை எண் 647-ல் பெரிய குளம் தாலுக்காவில் பி. டி. ராஜன் வாய்க்கால் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தினுல் கொடுவிலார்பட்டி, தாடிச்சேரி, தொப்புக்குண்டு, பூமலேக்குண்டு, ஜங்கல்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள கண்மாய்கள் பயனடைய இருக்கின்றன.

திரு. வெ. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் வாயிலாக தேனி ஒன்றியப் பகுதியில் சுமார் 500 ஏக்கருக்கு மேற்படாமல் பயனடையும் வகையில் பாசனக் கண்மாய்களுக்கு '' ஸ்டெபுலேசேஷன் '' (Stabilisat on) ஏற்படும் நிலைதான் இருக்கிறது. அதனல் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 180 எம்.சி.எப்.டி. தண்ணீர் முழுவதையும் தேனி வட்டத்திற்குப் பயன்படுத்த முடியாது ஆகவே, இப்போது நடந்துவருகிற உலக வங்கித் திட்டத்தின்கீழ் பாசன வசதி அளிக்கப்படும் 35,000 ஏக்கர் திட்டத்தில், தேனி பகுதிக்கு மேலும் 10,000 ஏக்கர் புதிய 'ட்ரை ஆயக்கட்டு' ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே ஒரு 'சம மட்ட வாய்க்கால்' அதாவது 'காண்டூர் கனல்' வெட்டி, தண்ணீர் தருவதற்குக் கேட்டிருக்கிருர்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.